## இலங்கை புடைவை மற்றும் ஆடை நிறுவகம் - 2018

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை புடைவை மற்றும் ஆடை நிறுவகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் காரணமாக நிறுவகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பான எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.
என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு முகவராண்மையின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- முகாமைத்துவத்தினால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக முகவராண்மையின் தொடர்ந்து நிலைத்திருந்தல் தொடர்பாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை உள்ளதாக என்பது சம்பந்தமாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை

காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் அடிப்படையில் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் முகவராண்மையின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க முகவராண்மை செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக் கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களை முகாமைத்துவத்தின் பொது மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் அமுல்படுத்துதல், தொடர்புபட்ட அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல், மற்றும் சொத்துக்களுக்கான கணக்களிப் பொறுப்பினைப் பேணுதல் முகாமைத்துவத்தின் பொது மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்காக கணக்களிப் பொறுப்பினைப் பேணி சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியின் போது இணக்கம் செய்தல், மற்றும் வித்தியாசம் காணப்படுமாயிருந்தால் அவை சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் முதலியவற்றிற்காக நியாயமான உறுதிப்படுத்திலினைப் பெற்றுக்கொள்வதற்குப் போதியளவு ‘‘சிறப்பாகத் திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமை நிறுவனத்தினால் பேணுதல் அத்தியாவசதியமானதாகும்.

### 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| உரிய நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் ஒரு சொத்திற்கான எஞ்சிய பெறுமதி மற்றும் பயன்தரு ஆயுட்காலம் என்பன ஒவ்வொரு வருட இறுதியிலும் அறிக்கையிடல் காலப்பகுதிக்குள் மீளாய்வு செய்யப்பட வேண்டுமாயினும், ரூபா 204,839,496 பெறுமதியான முற்றாகப் பெறுமானத்தேய்விடப்பட்ட சொத்துக்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் நிறுவனத்தினால் மீளாய்வு செய்யப்படாது அவற்றின் பயன்தரு ஆயுட்காலம் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தது. சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்படாமையுடன் அவற்றின் நியாயமான பெறுமதி கணக்குகளில் சீராக்கப்பட்டிருக்கவில்லை. | மீள்மதிப்பீட்டு நடவடிக்கைகள் செயற்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ‘‘பனானா நிகழ்ச்சித்திட்டம்’’ இற்காக மீளாய்வாண்டின் இறுதியின் போது அமைச்சிடமிருந்து பெற வேண்டியவைகள் ரூபா 10,250,125 ஆன தொகையால் கூடுதலாகக் காட்டப்பட்டிருந்தது. | 2019 ஆம் வருடத்தில் திருத்துவதற்கான சீராக்கம் மேற்கொள்ளப்பட்டது. | பெற வேண்டிய கணக்குகளின் மீதி கணக்குகளில் சரியாக காட்டப்பட வேண்டியமை |
| (ஆ) மீளாய்வாண்டில் வரிசை அமைச்சின் ஒதுக்கங்களின் கீழ் செயற்படுத்தப்பட்ட மூன்று நிகழ்ச்சித் திட்டங்களுக்காக மதிப்பிடப்பட்ட கிரயத்தினை விட மேலதிகமாக ரூபா 460,008 ஆன தொகை செலவிடப்பட்டிருந்தமை அவ்வாண்டிற்கான கிரயமாகக் கருதப்படாது அமைச்சிடமிருந்து பெற வேண்டியவைகளாக கடன்பட்டோரின் கீழ்க் காட்டப்பட்டிருந்தது. | | |

| | | | |
|---|---|---|---|
| (இ) | நானாவிதக் கடன்பட்டோர் மீதியினுள் திறைசேரியிடமிருந்து பெறப்பட்டதாக காட்டப்பட்ட ரூபா 5,442,000 இல் CCTV கமெரா முறைமை கோரப்பட்டிருந்த ரூபா 3,108,500 உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அதனால் நிதி நிலைமைக் கூற்றில் பெறவேண்டிய கணக்கு மீதி ரூபா 3,108,500 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | CCTV கமரா ஒன்றைக் கொள்வனவு செய்வதற்கு முடியாமல் இருந்தது. | குறிப்பிட்ட ஆண்டில் ஏற்படும் செலவினங்களுக் காக மட்டுமே ஒதுக்கீடுகள் பயன்படுத்தப்பட வேண்டியமை. |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியின் போது நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 6,780,996 ஆன வியாபாரக் கடன்பட்டோர் மீதியில் ரூபா 4,127,737 தொகையானது 3 வருடத்திற்கு மேற்பட்ட கடன்பட்டோர் மீதிகளாகும். | 3 வருடத்திற்கு மேற்பட்ட கடன்பட்டோர் மீதிகளை நீக்குவதற்கு அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளது. | கடன்பட்டோரிடமிருந்து பணத்தை அறவிடுவதற்கான முறையான நிகழ்ச்சித் திட்டமொன்றை நிறுவகத்தினுள் ஸ்தாபிக்க வேண்டியமை |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | அனைத்துப் படிகள் தொடர்பாகவும் குறிப்பிட்ட அமைச்சுக்கள், திறைசேரி மற்றும் ஏனைய குறிப்பிட்ட நிறுவனங்களிடமிருந்து அனுமதி பெறப்பட வேண்டுமாயினும், முகாமைத்துவத்தினால் வார இறுதி நாட்களுக்கான பயிற்சிப் பாடசாலைப்படிகள், கற்கைநெறிகள் ஒருங்கிணைப்புப் படிகள், நிர்வாகச் செயலாளரின் படிகள் என்பவற்றுக்காக 2018 ஆம் ஆண்டில் ரூபா 2,961,879 செலுத்தப்பட்டிருந்தது. | ஆளுகை சபையின் அனுமதியுடன் கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்ததுடன் திறைசேரிக்கும் அறிவிக்கப்பட்டிருந்தது. | செயலாளரின் அனுமதியுடன் பொதுத் திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட வேண்டியமை |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 24,658,844 ஆன மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகையானது ரூபா 54,535,545 ஆகும். அதன் பிரகாரம் நிதிசார் விளைவுகளில் ரூபா 29,876,701 ஆன குறைவொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் பயிற்சி வருமானத்தில் ஏற்பட்ட ரூபா 29,443,545 ஆன குறைவே இக்குறைபாட்டிற்கு பிரதான தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மேலதிக நிதியான ரூபா 214,925,758 ஆனது முகாமைத்துவத்தினால் முதலீடு செய்யப்பட்டதுடன் வட்டி வருமானமாக ரூபா 17,980,982 உழைக்கப்பட்டிருந்தது. இருந்தபோதிலும், நிறுவகத்தின் பிரதான நோக்கங்களை அடையும் வகையில் நிதிகள் பயனுள்ளதாகப் பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. | மேலதிக நிதி நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டது. | நிறுவகத்தின் பிரதான நோக்கத்தை அடையும் விதத்தில் நிதிகள் பயனுள்ள வகையில் பயன்படுத்தப்பட வேண்டியமை. |
| (ஆ) | புடவைகள் மற்றும் ஆடைகள் சம்பந்தமான கற்கைநெறிகள் மற்றும் பட்டப்பின் படிப்பு மற்றும் பட்டக் கற்கை நெறிகள் நடாத்தப்படுவதற்குத் தேவையான அடிப்படை வசதிகளை வழங்கும் நோக்கத்தில் 4 மாடிக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக 2015 நவம்பர் 11 ஆந் திகதி அமைச்சரவை அனுமதி பெறப்பட்டிருந்ததுடன் மீண்டும் கட்டிடத் திட்டத்தை மாற்றி 6 மாடிகள் கொண்ட கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக 2017 திசெம்பர் 19 ஆந் திகதி அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டிருந்தது. கட்டிடங்கள் திணைக்களத்தால் புதிய கட்டிடம் சம்பந்தமாக மதிப்பிட்ட தொகை ரூபா 505,910,000 ஆக மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக 2015 ஆம் வருடத்தில் ரூபா 18 மில்லியன் 2017 ஆம் ஆண்டில் ரூபா 5 | நிர்மாண வேலைகள் எதிர்காலத்தில் செயற்படுத்தப்படும். | திறைசேரியினால் வழங்கப்பட்ட ஒதுக்கங்கள் சரியான முறையில் பயன்படுத்தப்படல் வேண்டியமை. |

மில்லியன் என்பதாக ரூபா 23 மில்லியன் திறைசேரியினால் வழங்கப்பட்டிருந்தது. அதில் ரூபா 3.6 மில்லியன் மட்டுமே மீளாய்வாண்டின் போது இறுதியில் செலவிடப்பட்டிருந்தது. இந்நிர்மாண அலுவல்கள் சம்பந்தமாக தேவையான பெறுகை செயன்முறைகள் 2019 மே 31 வரையில் பூர்த்தியாக்கப்படாமையுடன் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 செயற்திட்டங்கள் மற்றும் மூலதன வேலைகளிலான தாமதம்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சு |
|---|---|---|
| நிகழ்ச்சித்திட்டத்தை செயற்படுத்துவதற்காக மீளாய்வாண்டின் முன்னைய வருடத்தில் வரிசை அமைச்சினால் பெறப்பட்ட ஒதுக்கங்களின் மீளாய்வாண்டின் ஆரம்பத்தின் போது Wet Processing நிகழ்ச்சித்திட்டம், புலமைப்பரிசில் நிதியம், மருதமுனை நூல் வர்ணந்தீட்டும் பயிற்சி நிலையம் அமைத்தல், சுகாதாரப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் தையல் இயந்திரங்களை பழுதுபார்க்கும் நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றுக்காக பெறப்பட்டிருந்த தொகைகள் முறையே ரூபா 420,537, ரூபா 236,867, ரூபா 2,243,450, ரூபா 1,406,663 மற்றும், ரூபா 1,047,344 ஆனவை வருடத்தினுள் எவ்வித விடயங்களுக்காகவும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டில் எவ்விதமான கொடுக்கல் வாங்கல்களும் இடம்பெறவில்லை. | திறைசேரியினால் வழங்கப்படும் நிதிகளைப் பயனுள்ளவாறு பயன்படுத்தப்பட வேண்டியமை. |

### 3.3 பெறுகை முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) உணவகத்தின் திட்டமிடப்பட்ட உள்ளக அலங்காரத்துக்கான பொறியியலாளரின் மதிப்பீடு ரூபா 6,000,000 ஆக இருந்ததுடன் 2017 திசெம்பர் மாதத்தில் அதற்காக திறைசேரியிடமிருந்து ரூபா 6,411,515 ஆன தொகை பெறப்பட்டிருந்தது. இரு தரப்பினருக்கும் இடையிலான உடன்படிக்கையின் பிரகாரம் 2018 | எதிர்காலத்தில் நிர்மாண வேலைகளை பூரணப் படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | திறைசேரியினால் வழங்கப்படும் ஒதுக்கங்கள் சரியான முறையில் பயன்படுத்தப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | செப்டம்பர் 09 இலிருந்து 60 நாட்களுக்குள் ஒப்பந்தமானது நிறைவடைய வேண்டியிருந்த போதிலும், அக்குறிப்பிட்ட ஒப்பந்தமானது இற்றை வரையில் நிறைவடையவில்லை. மதியுரைச் சேவைகளை வழங்கியமை மற்றும் முற்பணம் என்பவற்றுக்காக ரூபா 2,101,562 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | மாநாட்டு மண்டபத்தின் திருத்தச் செலவாக ரூபா 10,000,000 ஆன தொகை மதிப்பீடு செய்யப்பட்டதுடன் அதற்காக 2018 ஒக்டோபர் 30 இல் ரூபா 9,695,000 ஆன தொகை திறைசேரியிடமிருந்து பெறப்பட்டிருந்தது. பெறுகை நடைமுறைகள் சரியாகச் செயற்படுத்தப்படாமையினால் மீளாய்வாண்டின் இறுதியில் இத்தொகை அவ்வாறே காணப்பட்டது. | 2019 ஏப்ரல் மாதத்திலேயே திருத்த வேலைகள் ஆரம்பிக்கப் பட்டிருந்தன. | திறைசேரியினால் வழங்கப்படும் ஒதுக்கங்கள் சரியான முறையில் பயன்படுத்தப்பட வேண்டியமை. |
| (இ) | புடவைகள் நூல் நிலையம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக 2018 ஆம் ஆண்டில் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சினால் ரூபா 3,260,000 ஆன தொகையொன்று அங்கீகரிக்கப்பட்டிருந்தது. நூல் நிலையத்திற்காக 2018 ஆம் ஆண்டில் ரூபா 392,302 பெறுமதியான தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. புடவைகள் நூல் நிலையத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படாமையினால் கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்கள் பயன்படுத்தப்படாது நிறுவகத்தின் நெசவு வேலைத்தளத்தில் விளைவற்றதாகத் தேக்கி வைக்கப்பட்டிருந்தன. | இடப்பிரச்சினை காரணமாக இது செய்யப்படவில்லை. புடைவைகள் நூல் நிலையம் எதிர்காலத்தில் கட்டப்படும். | அனுமதிக்கப் பட்டதன் பிரகாரம் புடைவைகள் நூல் நிலையம் கட்டுவதற்கு ஆரம்பிக்கப்பட வேண்டியமை. |
| (ஈ) | பழைய கட்டிடத்தின் ஒரு பகுதியை அழித்து புதிய 4 மாடிக் கட்டிடமொன்றை கட்டுவதற்காக அலுவலக வேலைகளைச் செய்யும் பொருட்டு 2017 யூன் 01 இலிருந்து ஒரு வருட காலத்திற்கு ரூபா 80,000 மாதாந்த தவணைப் ணமாக செலுத்திக் கட்டிடமொன்று வாடகைக்கு பெறப்பட்டது. புதிய கட்டிடத்திற்கான நிர்மாண வேலைகள் தொடங்காமையினால் வாடகைக்குப் பெறப்பட்ட கட்டிடம் | திட்டமிடப்பட்ட கட்டிடம் விரைவில் கட்டப்பட வேண்டியமையால் கட்டிடமொன்று வாடகைக்கு பெறப்பட்டது. | கட்டிடத்தைப் பயன்படுத்தாது இருப்பது சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல் ஆகும். |

| | | | |
|---|---|---|---|
| | பயன்படுத்தப்படாது விடப்பட்டதுடன் குறுகிய நாட்களுக்கு அதில் சில பயிற்சியாளர்கள் அமர்த்தப்பட்டிருந்தனர். 2018 ஏப்ரல் 16 ஆந் திகதி முதல் அக்கட்டிடத்திற்கான உடன்படிக்கைக் காலம் இரத்துச் செய்யப்பட்டிருந்த போதிலும் ரூபா 960,000 ஆன தொகை கட்டிட வாடகையாக மற்றும் ரூபா 8,353 ஆன தொகை தண்ணீர் மின்சாரச் செலவுகளுக்காகவும் செலுத்தப்பட்டிருந்தன. | | |
| (உ) | பெறுகை வழிகாட்டியின் 5.4.8(அ) வின் பிரகாரம் செயலாற்றல் பிணை ஒன்று வழங்கப்பட வேண்டியதுடன் 5.4.8(ஆ) இன் பிரகாரம் வேலைகள் நிறைவடைந்த பின்னர் 28 நாட்களுக்கு அச் செயலாற்றல் பிணையானது பெறுமதி மிக்கதாக இருத்தல் வேண்டும். நிறுவனத்தின் உணவகத்திற்கான திட்டமிடப்பட்ட உள்ளக அலங்கார வேலைகள் சம்பந்தமாக 2017 ஒக்டோபர் 14 ஆந் திகதி தேசிய போட்டி விலை மனுக்கோரல் செயன்முறையின் கீழ் மனுக்கள் கோரப்பட்டதுடன் 2017 நவம்பர் 28 ஆந் திகதி ரூபா 8,024,885 கிரயத்திற்கான கேள்வி மனுவிற்கு வழங்கப்பட்டிருந்தது. தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தத்திற்காக பெறப்பட்ட ரூபா 802,488 க்கு செயலாற்றுப் பிணை செல்லுபடியாகும் காலப்பகுதி 2018 மார்ச் 07 இல் முடிவடைந்தது. 2018 யூலை 23 தொடக்கம் திசெம்பர் 31 வரையில் மட்டுமே மீண்டும் செயலாற்றுப் பிணையின் காலம் நீடிக்கப்பட்டிருந்தது.<br>முற்பணத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட முற்பணக் கொடுப்பனவிற்கான பிணையின் காலம் முடிவடைந்து 1 வருடமும் 3 மாதங்கள் கடந்த நிலையில் அதைப் புதுப்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படாததுடன் ஒப்பந்தம் முடிவடையும் வேலைகள் சம்பந்தமாக பொறியியலாளரின் அறிக்கை பெறப்பட்டிருக்கவில்லை. | செயலாற்றுப் பிணைக்கான காலத்தை நீடிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | உணவகத்தின் திட்டமிட்ட உள்ளக அலங்கார வேலைகளை முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டியமை. |

### 3.4 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் இறுதியின் பொது இலங்கைப் புடைவை மற்றும் ஆடை நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 140 ஆகக் காணப்பட்டதுடன் உள்ளபடியான பதவியணியினர் 93 ஆகக் காணப்பட்டமையால் 47 வெற்றிடங்கள் காணப்பட்டன. கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது வெற்றிடங்களின் எண்ணிக்கை 5 ஆக உயர்ந்துள்ளதுடன் மற்றும் மீளாய்வாண்டின் இறுதிவரை இப்பதவிகளை நிரப்புவதற்கான எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. | நிறுவகத்தின் செலவுகளைக் கருத்திற் கொண்ட பின்னரே ஆட்சேர்ப்புச் செய்யப்படும். | வெற்றிடங்களுக்கான ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட வேண்டியமை. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 208 பயிற்சிக் கற்கைகள் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், மாதாந்தப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் 47 கற்கைகள் மாத்திரமே செயற்படுத்தப்பட்டிருந்தது. | சில கற்கைகளுக்காக மாணவர்களின் விண்ணப்பப் படிவங்களில் பற்றாக்குறை ஏற்பட்டமையே கற்கை நெறிகள் நடாத்தப்படாமைக்கான காரணமாகும். | கற்கை நெறிகளின் செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்கியதாக நடாத்தப்பட வேண்டியமை. |